சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 08.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 6330/E/2024**

திரு.கோவை எஸ்.எஸ்.மனோ -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
சார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
அயனாவரம் வட்டம், சென்னை-102.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 28.01.2026 மற்றும் 08.05.2026 தேதியிட்ட உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலர் திரு.S.பிரகாசம், சார் ஆய்வாளர், அயனாவரம் அவர்கள் இவ்வாணையத்தில் 08.06.2026-ல் ஆஜராகி 05.06.2026 தேதியிட்ட அறிக்கையினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், 28.01.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் பார்வையிட்டு குறிப்பெடுத்துக்கொள்ளுமாறு பொதுத தகவல் அலுவலரின் ந.க.எண்.21/2026, நாள் 11.05.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் மனுதாரர், நாளதுவரை பொது அதிகார அமைப்பில் ஆவணங்களை பார்வையிட ஆஜராகவில்லை எனவும், மேலும், இதுகுறித்து பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர் (நிலை-பி), தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி, எழும்பூர், சென்னை அவர்களிடமிருந்து 07.05.2026 அன்று பெறப்பட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், அயனாவரம் வட்டம், மல்லிகைச்சேரி நகரத்திற்குறிய பிளக் எண்.1, நகரளவை எண்.89/1, 2, 3-க்கு புலவரைபடம் காப்பக பராமரிப்பில் உள்ள கிராம அட்டவணையில் மல்லிகைச்சேரி கிராம பெயர்

இடம்பெறவில்லை எனவும், டவுன் சர்வேக்கான புலப்பட ஆவணம் காப்பக பராமரிப்பில் இல்லை எனவும் தெரிவித்துள்ளதாகவும், பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்டவாறு பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, சட்டப் பிரிவு 2(j)-ன்கீழ் தகவல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டு, தனக்கு தேவையான தகவல்களை குறிப்பிட்டு பெற்றுக்கொள்ளும் பொருட்டு, மனுதாரருக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டும், மனுதாரர் அதனை பயன்படுத்த தவறியுள்ளார் என்பது ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது. எனவே, இவ்வழக்கில் கோரிய தகவல் தொடர்பாக மனுதாரர் பொது அதிகார அமைப்பில் ஆஜராகும் பட்சத்தில், 28.01.2026 தேதியிட்ட இவ்வாணைய உத்தரவில் தெரிவித்துள்ளவாறு மனுதாரருக்கு தகவல் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டும், மேலும், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திலிருந்து பெறப்பட்ட 07.05.2026 தேதியிட்ட கடிதத்தின் நகலினையும் மனுதாரருக்கு பதிவுத் தபால் மூலம் 30.06.2026-க்கு அனுப்பி, அதுகுறித்த அறிக்கையினை இவ்வாணையத்திற்கு 30.06.2026-க்குள் அனுப்ப பொதுத தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டும், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 6330/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ சார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
அயனாவரம் வட்டம், சென்னை-102.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு.கோவை எஸ்.எஸ்.மனோ, த/பெ.எஸ்.சுந்தர ராஜுலு,
வி-2, ஆர்சி என்கிளேவ்,
36, செல்வம் நகர்,
பொன்னியம்மன் மேடு, சென்னை-600 110.

Copy to: File MP/PA,